# කාර්ය සාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# Performance Report

2018.04.01 – 2018.06.30

**(දෙවන කාර්තුව, இரண்டாம் காலாண்டு, 2nd Quarter)**

**ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ සීමා නිර්ණය කොමිෂන් සභාව**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின எல்லை நிர்ணய ஆணைக்குழு

**Delimitation Commission of Democratic Socialist Republic of Sri Lanka**

**எல்லை நிர்ணய ஆணைக்குழு**
**2018 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை**
**2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆம் திகதி வரை**

**1.0 பின்னணி.**

தற்போதைய எல்லை நிர்ணய ஆணைக்குழு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 41B மற்றும் 95(1) உறுப்புரைகளுக்கு அமைவாக 2015.11.13 ஆம் திகதி திகதி தாபிக்கப்பட்டது. அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட எல்லை நிர்ணய ஆணைக்குழு தவிசாளர் கலாநிதி கே.தவலிங்கம் அவர்களையும், உறுப்பினர்களான கலாநிதி அனிலா டயஸ் பண்டாரநாயக்க மற்றும் பேராசிரியர் எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ் ஆகிய மூன்று அங்கத்தவர்களையும் கொண்டது.

அரசியல் யாப்பின் 95 மற்றும் 96 ஆகிய உறுப்புரைகளின் மூலம் ஆணைக்குழுவின் பிரதான பணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் ஏனைய ஆணைக்குழுக்களைப் போன்று இந்த எல்லை நிர்ணய ஆணைக்குழு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அரசியல் யாப்பில் அல்லது 19 ஆம் அரசியல் யாப்புத் திருத்தத்தில குறிப்பிடப்படவில்லை.

- ஆணைக்குழுவின் பணிகள்
- ஆணைக்குழுவின் அதிகாரங்கள்/தத்துவங்கள்

ஆரம்பத்தில் அரசியலமைப்புப் பேரவையினால் தெரிவிக்கப்பட்ட கருத்து யாதெனில், புதிய அரசியலமைப்பொன்றை வரைகின்ற போது அல்லது அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்கின்ற போது தனியான எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பதற்கும் மற்றும் அதன் பணிப்பொறுப்புகள் தொடர்பாக விபரிக்கின்ற போது, சகல புவியியல் சார்ந்த எல்லை நிர்ணயம் செய்தல் பணிகளை சட்டரீதியான அடிப்படையில் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதாகும்.

**2.0. நோக்கு**: நெறிமுறை மற்றும் நியாயமான கோட்பாடுகளிள் அடிப்படையில் எல்லைகளை நிர்ணயம் செய்வதில் சிறந்து விளங்குதல்

**பணிக்கூற்று** :அரசியல் யாப்பினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளவாறு சுயாதீனமாகவும், நெறிமுறையுடனும், நியாயமாகவும், வினைத்திறனுடனும், வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும், விசுவாசமாகவும் மற்றும் சட்டரீதியானதாகவும் எல்லைகளை நிர்ணயம் செய்தல்.

**நோக்கங்கள்:**

- அனைத்து வாக்காளர்களுக்கும் அல்லது பிரசைகளுக்கும் சமமான உயர்ந்த அளவில் சமமான பிரதிநிதித்துவம் கிடைக்கத்தக்க விதத்தில் மற்றும் மக்களின் சனநாயக உரிமைகள் மற்றும் அந்த நிலைமையைப் பாதுகாக்கின்றவாறு வினைத்திறனுடன் அதனை உறுதி செய்வதற்காக தேர்தல்கள் மாவட்டங்கள் மற்றும் ஏனைய நிருவாக எல்லைகளை நிர்ணயம் செய்தல்.
- தேர்தல் மாவட்டம் அல்லது நிருவாக பிரதேசம் அல்லது கல்வி, சுகாதார அல்லது பாதுகாப்பு போன்ற சமூக – பொருளாதார சேவைகளுக்கான எல்லைகளை நிர்ணயம் செய்வதற்காகக் கையளிக்கப்படுகின்ற எல்லை நிர்ணய அலுவல்களை உரிய காலப்பகுதியினுள் பூர்த்தி செய்தல்.
- அரசு மற்றும் வேறு நிறுவனங்களுக்கு சுய தீர்மானம் எடுப்பதற்குத் தேவையான எல்லை நிர்ணயங்களிற்குத் தேவையான அறிவு மற்றும் தகவல்களை வழங்குதல்.
- எல்லை நிர்ணயம் தொடர்பான தகவல்கள் மற்றும் உரிய ஆவணங்களை சேகரிக்கும் நிலையமொன்றைத் தாபித்தல்.

## 3.0. கொள்கை ரீதியான விடயங்கள்

### 3.1. அமுலாக்கல் திட்டம்.

ஆண்டினுள் எதிர்பார்க்கப்பட்ட யாப்புத் திருத்தம் இடம்பெறவில்லை. அதன் காரணமாக 2018 ஆம் ஆண்டின் அமுலாக்கல் திட்டத்தைத் தயாரிக்கும் போது பல நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டது. இருப்பினும் அமுலாக்கல் திட்டம் தயாரிக்கப்பட்டு திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. (இணைப்பு 01ஐப் பார்க்கவும்)

### 3.2 மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பான தேர்தல் தொகுதிகளை நிர்ணயம் செய்தல்

2017 ஆம் ஆண்டின் மாகாண சபைத் தேர்தல்கள் ( திருத்தச் ) சட்டம் 2017.09.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. 2017.10.04 ஆம் திகதி எல்லை நிர்ணய குழுவொன்று சனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்டது. பத்தொன்பதாம் அரசியலமைப்புத் திருத்தத்திற்கமைய இந்தக் குழுவில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் ஏனைய இரண்டு உறுப்பினர்கள் உள்ளடக்கப்பட்டனர். குழுவின் பணிகள் நிறைவு செய்யப்பட்டு 2018 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை பாராளுமன்றத்தினால் விவாதிக்கப்படவோ அல்லது நிறைவேற்றப்படவோ இல்லை. எல்லை நிர்ணய குழுவின் அறிக்கை தேர்தல் ஆணைக்குழுவின் இணையப்பக்கத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அறிக்கையின் பிரதிகள் உரிய தரப்புக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 4.0 கடந்த மூன்று மாத காலப்பகுதியில் செயலாற்றுகை

### 4.1 கூட்டங்கள்

**எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் கூட்டங்கள்** நிருவாக அலுவல்கள் மற்றும் கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக குறித்த காலாண்டினுள் ஆணைக்குழுவின் இரண்டு கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

27 ஆம் கூட்டம் 2018.05.03
28 ஆம் கூட்டம் 2018.06.22

### 4.2 எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு ஒரு சட்டத்தைத் தயாரிப்பதற்கான கொள்கை ரீதியான முன்மொழிவுகளைத் தயாரித்தல்.

எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்றைத் தாபித்தல் தொடர்பாக அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக் கொள்ளத் தேவையான கொள்கை அடிப்படையிலான முன்மொழிகள் சனாதிபதி செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு பதிலாக அமைச்சரவையில் கலந்துரையாடத் தக்கவித்தில் தேவையான தகவல்கள் மற்றும் முன்மொழிவுகள் அடங்கிய கொள்ளை முன்மொழிவுகளை உள்ளடக்கிய அமைச்சரவைப் பத்திரமொன்றை ( கொள்கை முன்மொழிவுக்கு இணைப்பொன்றாக ) தயாரிக்குமாறு அறிவுறுத்தல் கிடைக்கப்பெற்றது. அமைச்சவைப் பத்திர வரைவு 2017.10.18 ஆம் திகதி சனாதிபதியின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. நினைவூட்டப்பட்டதன் பின்னர் அதற்குப் பதில் கிடைக்கப் பெற்றுள்ளது ( இணைப்பு 02)

## 5.0 நிருவாகம் விடயங்கள்

### 5.1 எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்குரிய அலுவலக வசதிகள்

2016 ஆம் ஆண்டு தொடக்கம் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அலுவலகத்தை நில அளவைத் திணைக்களத்தில் வாடகையின்றிப் பேணிச் செல்வதற்கு நில அளவையாளர் நாயகம் அவர்களால் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

**தற்போதைய அலுவலக முகவரி**
எல்லை நிர்ணய ஆணைக்குழு
நிலஅளவையாளர் நாயகம் அலுவலகக் கட்டிடம்,
அ.பெ. 506,
கொழும்பு – 05.

### 5.2 . வாகன நடவடிக்கைகள்

பொதுத் திறைசேரியினால் எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு 2016 ஆம் ஆண்டில் 2 வாகனங்கள் வழங்கப்பட்டன. CAP 7180 ஆம் இலக்கம் கொண்ட வாகனம் சனாதிபதியின் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டு அப்பெயரிலேயே காப்புறுதியும் செய்யப்பட்டுள்ளதோடு அவ்வாகனம் தவிசாளருக்காகக் குறித்தொதுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது மோட்டார் வாகனம் CAR 0347 சனாதிபதி செயலகத்தினால் இணைப்புச் செய்ப்பட்டுள்ளது.

### 5.3 எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பணியாட்குழு நியமனம்.

எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்படுகின்ற பணிப் பொறுப்புக்களைக் கருத்திற் கொண்டு முகாமைத்துவ பணிப்பாளர் நாயகம் அவர்களால் அவருடைய 2016.02.05 ஆம் திகதிய DMS/1029 ஆம் இலக்க கடிதம் மூலம் கீழ்வரும் நியமனங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

| பதவி | மட்டம் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளக் குறியீடு |
|---|---|---|---|
| செயலாளர் | சிரேட்ட | 01 | SL-3-2006 |
| கணக்காளர் | சிரேட்ட | 01 | SL-1-2006 |
| இணைப்புச் செயலாளர் | மூன்றாம் நிலை | 01 | MN-7-2006 |
| நிருவாக அலுவலர் | மூன்றாம் நிலை | 01 | MN-7-2006 |
| மொழி பெயர்ப்பாளர் | இரண்டாம் நிலை | 03 | MN-6-2006 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | இரண்டாம் நிலை | 02 | MT-1-2006 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | இரண்டாம் நிலை | 02 | MN-2-2006 |
| சாரதி | ஆரம்ப | 02 | PL-3-2006 |
| அலுவலகப் பணியாளர் | ஆரம்ப | 02 | PL-1-2006 |
| **மொத்தம்** | | 15 | |

இந்த காலாண்டில் கீழ்க்காணும் நியமனங்கள் செய்யப்பட்டன.

- பதில் கடமை செயலாளர் - திரு. சமன் ஸ்ரீ ரத்நாயக்க 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் பதில் கடமை செயலாளர் நியமனம் ஒரு வருடகாலத்திற்கு கால நீட்டிப்புச் செய்யப்பட்டது.
- பதில் கடமை கணக்காளர்- எச்.டப்ளிவ்.என். குமார 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் திகதி தொடக்கம் பதில் கடமை கணக்காளரின் நியமனம் ஒரு வருடகாலத்திற்கு கால நீட்டிப்புச் செய்யப்பட்டது.

இதற்கமைய 2018.06.30 திகதியாகும் போது பணியில் ஈடுபட்டிருந்தோர் விபரம் பின்வருமாறு.

| பதவி | அனுமதிக்கப்பட்ட | நிரப்பப்பட்ட | வெறற்றிடம் |
|---|---|---|---|
| செயலாளர் | 01 | 01 [a] | - |
| கணக்காளர் | 01 | 01 [a] | - |
| இணைப்புச் செயலாளர் | 01 | 01 | - |
| நிருவாக அலுவலர் | 01 | 01 | - |
| மொழி பெயர்ப்பாளர் | 03 | 0 | 03 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 02 | 0 | 02 |
| அரச முகாமைத்துவ எதவியாளர் | 02 | 02 | - |
| சாரதி | 02 | 02 | - |
| அலுவலகப் பணியாளர் | 02 | 02 | - |
| மொத்தம் | 15 | 10 | 05 |

a பகுதி நேரம்.

## 6.0 . தீர்க்கப்படாத விடயங்கள்

1. கையேற்றுக் கொண்ட நியமனத்தின் படி எல்லை நிர்ணய ஆணைக்குழு அங்கத்தவர்கள் 2015.11.19 ஆம் திகதி அரசியலமைப்புப் பேரவை மூலம் முதலாவது கூட்டத்திற்கு அழைக்கப்பட்டனர்.

2. மேலே குறிப்பிட்டவாறு காணப்படும் அரசியல் அமைப்பினால் எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்குரிய பணிப்பொறுப்புக்கள் விதிக்கப்படவில்லை. இதேவேளை இலங்கையில் காணப்படும் சட்டங்கள் மற்றும் நடைமுறை விதிகள் சிலவற்றின் மூலம் தேர்தல் தொகுதிகள் மற்றும் நிருவாக மட்டங்களில் பல்வகையான எல்லை நிர்ணயங்கள் இடம்பெற்றுவருவதோடு, அவற்றிலிருந்து சிறந்த பயன்களைப் பெறுவதற்கெனில் அவை அனைத்தும் சரியான முறைப்படி செய்யப்படல் வேண்டும்.

3. அத்தகைய நிலைமையொன்றை உருவாக்கும் நோக்கில்,

- 2016 யூலை மாதத்தில் "அரசியல் யாப்புத்திருத்தத்தின் மூலம் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பணிப்பொறுப்புக்களை வரிவுபடுத்தல்" என்ற தலைப்பிலான கொள்கை முன்மொழிவு அரசியலமைப்புப் பேரவையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.
- மேற்படி முன்மொழிவுகள் அரசியலமைப்புப் பேரவை வழிநடாத்தல் குழுவின் அரச சேவை பற்றிய பாராளுமன்ற உபகுழுவின் செயலாளருக்கு, தவிசாளர் அவர்களால் தயாரிக்கப்பட்ட" புதிய அரசில் யாப்பொன்று அல்லது யாப்புத் திருத்தமொன்று தயாரிக்கும் போது எல்லை நிர்ணய ஆணைக்குழு தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள். " என்ற இணைப்பொன்று சகிதம் 2016 யூலை மாதம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த முன்மொழிவுகள் உபகுழுவினால் கவனத்தில் கொள்ளப்பட்டன.
- புதிய அரசியலமைப்பொன்றை வரையும் போது அல்லது அரசியல் யாப்புத் திருத்தமொன்றைச் செய்யும் போது கருத்திற் செய்வதற்காக இலங்கையில் எல்லை நிர்ணய பணிகளுக்கான கோட்பாட்டுக் கொள்கைச் சட்டகம்" என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்ட கடிதம் 2016 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதத்தில் அதன் தலைவரான கௌரவ பிரதமர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.
- எல்லை நிர்ணய ஆணைக்குழு இந்த முன்மொழிவுகள் தொடர்பான முடிவுகளுக்காகக் காத்திருக்கின்றது.

இணைப்பு – 1

# எல்லை நிர்ணய ஆணைக்குழு

# 2018 – வருடாந்த அமுலாக்கல் திட்டம்

**நோக்கு:**

நெறிமுறை மற்றும் நியாயமான கோட்பாடுகளிள் அடிப்படையில் எல்லைகளை நிர்ணயம் செய்வதில் சிறந்து விளங்குதல்

**பணிக்கூற்று :**

அரசியல் யாப்பினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளவாறு சுயாதீனமாகவும், நெறிமுறையுடனும், நியாயமாகவும், வினைத்திறனுடனும், வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும், விசுவாசமாகவும் மற்றும் சட்டரீதியானதாகவும் எல்லைகளை நிர்ணயம் செய்தல்.

## நோக்கங்கள்:

- அனைத்து வாக்காளர்களுக்கும் அல்லது பிரசைகளுக்கும் சமமான உயர்ந்த அளவில் சமமான பிரதிநிதித்துவம் கிடைக்கத்தக்க விதத்தில் மற்றும் மக்களின் சனநாயக உரிமைகள் மற்றும் அந்த நிலைமையைப் பாதுகாக்கின்றவாறு வினைத்திறனுடன் அதனை உறுதி செய்வதற்காக தேர்தல்கள் மாவட்டங்கள் மற்றும் ஏனைய நிருவாக எல்லைகளை நிர்ணயம் செய்தல்.

- தேர்தல் மாவட்டம் அல்லது நிருவாக பிரதேசம் அல்லது கல்வி, சுகாதார அல்லது பாதுகாப்பு போன்ற சமூக – பொருளாதார சேவைகளுக்கான எல்லைகளை நிர்ணயம் செய்வதற்காகக் கையளிக்கப்படுகின்ற எல்லை நிர்ணய அலுவல்களை உரிய காலப்பகுதியினுள் பூர்த்தி செய்தல்.

- அரசு மற்றும் வேறு நிறுவனங்களுக்கு சுய தீர்மானம் எடுப்பதற்குத் தேவையான எல்லை நிர்ணயங்களிற்குத் தேவையான அறிவு மற்றும் தகவல்களை வழங்குதல்.

- எல்லை நிர்ணயம் தொடர்பான தகவல்கள் மற்றும் உரிய ஆவணங்களை சேகரிக்கும் நிலையமொன்றைத் தாபித்தல்.

## பணிப்பொறுப்புக்கள்/சட்டக் கொள்கைகள்

1. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஏற்புடைய அனைத்து ஏற்பாடுகள்.

# உள்ளடக்கம்.

01. திட்டமிடல் மற்றும் பயிற்சி........................................................................................................................... 01
02. தகவல்களைச் சேகரித்தல்............................................................................................................................... 02
03. இலங்கையின் தற்போதைய சனத்தொகை மற்றும் காணிகள் என்பவற்றை முதன்மையாகக் கொண்டு கடந்த பாராளுமன்றத் தேர்தல்கள் மற்றும் தொடர்புடைய எல்லை நிர்ணய அறிக்கைகளைப் பகுப்பாய்வு செய்தல்........................................................................................................................................ 03
04. நிருவாகப் பிரிவுகளின் எல்லைகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்தல்.......................................................................... 04
05. உள்ளூராட்சி நிறுவனங்களின் எல்லைகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்தல்........................................................... 05
06. தற்காலத்திற்குப் பொருத்தமான அறிக்கைகள்/சுவடிக் கூடமொன்றை ஒழுங்கமைத்தல் மற்றும் மென் பிரதிகளைத் தயாரித்தல்......................................................................................................................... 06

**எல்லை நிர்ணய ஆணைக்குழு**

**2018 வருடாந்த அமுலாக்கல் திட்டம்**

**1.0 உத்தேச பணி:** திட்டமிடல் மற்றும் பயிற்சி

| கொள்கை | மூலோபாயம் | உத்தேச பணி | ஒதுக்கீடு (ரூபா.000') | ஆரம்பிக்கப் படும் திகதி | முடிவடையும் திகதி | நிதி இலக்கு (ரூபா.000') (திரண்ட) | | | | பௌதீக இலக்கு ( திரண்ட) | | | | முடிவுக் குறிகாட்டி | பொறுப்பு | வேறு விடயம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | த 1 | த 2 | த 3 | த 4 | த 1 | த 2 | த 3 | த 4 | | | |
| திட்டமிடல் | | 1.1 வருடாந்த திட்டத்தை தயாரித்தல் | விடயம் | 01.01.2018 | 31.12.2018 | | | | | √ | | | | | செயலாளர் | |
| | | 1.2 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல் | விடயம் | 01.01.2018 | 31.12.2018 | | | | | 1 | 2 | 3 | 4 | | | |
| பயிற்சி | | 1.3 ஆணைக்குழுவின் அலுவலர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல் | விடயம் | 01.01.2018 | 31.12.2018 | | | | | √ | √ | | | | செயலாளர் | |

**எல்லை நிர்ணய ஆணைக்குழு**
**2018 வருடாந்த அமுலாக்கல் திட்டம்**

**2.0 உத்தேச பணி:** தகவல்களைச் சேகரித்தல்

| கொள்கை | மூலோபாயம் | உத்தேச பணி | ஒதுக்கீடு (ரூபா.000') | ஆரம்பிக்கப் படும் திகதி | முடிவடையும் திகதி | நிதி இலக்கு (ரூபா.000') (திரண்ட) | | | | பௌதீக இலக்கு ( திரண்ட) | | | | முடிவுக் குறிகாட்டி | பொறுப்பு | வேறு விடயம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | த 1 | த 2 | த 3 | த 4 | த 1 | த 2 | த 3 | த 4 | | | |
| | | 2.1.தகவல்கள்/வர்த்தமாணி அறிவித்தல்களைச் சேகரித்தல்- ( உள்ளூராட்சி நிறுவனங்கள் ( மாநகர சபை,நகர சபை, பிரதேச சபை) என்பவற்றின் எல்லைகள் | விடயம் | 01.01.2018 | 31.12.2018 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | | ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் | |
| | | 2.2 .தகவல்கள்∴வர்த்தமாணி அறிவித்தல்களைச் சேகரித்தல – நிருவாகப் பிரிவு எல்லைகள் (மாகாண,மாவட்டம்,பிரதேச செயலாளர் பிரிவு, கிராம அலுவலர் பிரிவு) | விடயம் | 01.01.2018 | 31.12.2018 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | | ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் | |

**எல்லை நிர்ணய ஆணைக்குழு**

**2018 வருடாந்த அமுலாக்கல் திட்டம்**

**3.0 உத்தேச பணி:** இலங்கையின் தற்போதைய சனத்தொகை மற்றும் காணிகள் என்பவற்றை முதன்மையாகக் கொண்டு கடந்த பாராளுமன்றத் தேர்தல்கள் மற்றும் தொடர்புடைய எல்லை நிர்ணய அறிக்கைகளைப் பகுப்பாய்வு செய்தல்

| கொள்கை | மூலோபாயம் | உத்தேச பணி | ஒதுக்கீடு (ரூபா.000') | ஆரம்பிக்கப் படும் திகதி | முடிவடையும் திகதி | நிதி இலக்கு (ரூபா.000') (திரண்ட) | | | | பௌதீக இலக்கு ( திரண்ட) | | | | முடிவுக் குறிகாட்டி | பொறுப்பு | வேறு விடயம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | த 1 | த 2 | த 3 | த 4 | த 1 | த 2 | த 3 | த 4 | | | |
| | | 3.1. 1946, 1959, 1976, 1981, 1988. பாராளுமன்றத் தேர்தல்கள் பகுப்பாய்வு | விடயம் | 01.01.2018 | 31.12.2018 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | | ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் | |
| | | 3.2 தற்போதைய தேர்தல் தொகுதி எல்லைகள் தொர்பாக ஆராய்தல் மற்றும் உத்தேச தேர்தல் தொகுதி எல்லைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தல் | விடயம் | 01.01.2018 | 31.12.2018 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | | ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் | |
| | | 3.3.மாகாண சபைத் தேர்தல் தொகுதி எல்லைகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்தல் | விடயம் | 01.01.2018 | 31.12.2018 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | | ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் | |

**எல்லை நிர்ணய ஆணைக்குழு**

**2018 வருடாந்த அமுலாக்கல் திட்டம்**

**4.0 உத்தேச பணி:** நிருவாகப் பிரிவுகளின் எல்லைகள் தொடர்பாக ஆராந்து பார்த்தல்

| கொள்கை | மூலோபாயம் | உத்தேச பணி | ஒதுக்கீடு (ரூபா.000') | ஆரம்பிக்கப் படும் திகதி | முடிவடையும் திகதி | நிதி இலக்கு (ரூபா.000') (திரண்ட) | | | | பௌதீக இலக்கு ( திரண்ட) | | | | முடிவுக் குறிகாட்டி | பொறுப்பு | வேறு விடயம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | த 1 | த 2 | த 3 | த 4 | த 1 | த 2 | த 3 | த 4 | | | |
| | | 4.1 மாகாண மற்றும் மாவட்ட எல்லை நிர்ணயங்கள் தொடர்பாக ஆராய்தல் | விடயம் | 01.01.2018 | 31.12.2018 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | | ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் | |
| | | 4.2 தற்போதைய பிரதேச செயலாளர் பிரிவுகளை ஆராய்ந்து பார்த்தல் | விடயம் | 01.01.2018 | 31.12.2018 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | | ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் | |
| | | 4.3 கிராம அலுவலர் பிரிவுகளின் எல்லைகள் தொடர்பாக ஆராய்தல் மற்றும் மீள எல்லைகளை முன்மொழிதல் | விடயம் | 01.01.2018 | 31.12.2018 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | | ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் | |

**எல்லை நிர்ணய ஆணைக்குழு**
**2018 வருடாந்த அமுலாக்கல் திட்டம்**

**5.0 உத்தேச பணி:** உள்ளூராட்சி நிறுவனங்களின் எல்லைகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்தல்

| கொள்கை | மூலோபாயம் | உத்தேச பணி | ஒதுக்கீடு (ரூபா.000') | ஆரம்பிக்கப் படும் திகதி | முடிவடையும் திகதி | நிதி இலக்கு (ரூபா.000') (திரண்ட) | | | | பௌதீக இலக்கு ( திரண்ட) | | | | முடிவுக் குறிகாட்டி | பொறுப்பு | வேறு விடயம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | த 1 | த 2 | த 3 | த 4 | த 1 | த 2 | த 3 | த 4 | | | |
| | | 5.1 பிரதேச சபைகளின் எல்லைகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்தல் | விடயம் | 01.01.2018 | 31.12.2018 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | | ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் | |
| | | 5.2 மாநகர சபைகளின் எல்லைகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்தல். | விடயம் | 01.01.2018 | 31.12.2018 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | | ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் | |
| | | 5.3 நகர சபைகளின் எல்லைகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்தல் | விடயம் | 01.01.2018 | 31.12.2018 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | | ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் | |

**எல்லை நிர்ணய ஆணைக்குழு**
**2018 வருடாந்த அமுலாக்கல் திட்டம்**

**6.0 உத்தேச பணி:** தற்காலத்திற்குப் பொருத்தமான அறிக்கைகள்/சுவடிக் கூடமொன்றை ஒழுங்கமைத்தல் மற்றும் மென் பிரதிகளைத் தயாரித்தல்

| கொள்கை | மூலோபாயம் | **உத்தேச பணி** | ஒதுக்கீடு (ரூபா.000') | ஆரம்பிக்கப்படும் திகதி | முடிவடையும் திகதி | நிதி இலக்கு (ரூபா.000') (திரண்ட) | | | | பௌதீக இலக்கு (திரண்ட) | | | | முடிவுக் குறிகாட்டி | பொறுப்பு | வேறு விடயம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | த 1 | த 2 | த 3 | த 4 | த 1 | த 2 | த 3 | த 4 | | | |
| . | | 6.1 தற்காலத்திற்குப் பொருத்தமான அறிக்கைகள்/சுவடிக் கூடமொன்றை ஒழுங்கமைத்தல் | விடயம் | 01.01.2018 | 31.12.2018 | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | | ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் | |

# ජනාධිපති කාර්යාලය
# சனாதிபதி அலுவலகம்
# PRESIDENTIAL SECRETARIAT

මගේ අංකය: **PS/AC/CCU/01/03/05**

2018 ජුනි මස 29 දිනය

DELIMITATION COMMISSION
04 JUL 2018
COLOMBO - 05

**සමන් ශ්‍රී රත්නායක මහතා**

ලේකම්

සීමා නිර්ණය කොමිෂන් සභාව

**සීමා නිර්ණය කොමිෂන් සභා පනත සකස් කිරීම**

උක්ත කරුණ සම්බන්ධයෙන් යොමු කරන ලද අංක DC/AD/03/ACT හා 2018 අප්‍රේල් මස දින රහිත ලිපිය හා බැඳේ.

02. සීමා නිර්ණය කොමිෂන් සභාවේ බලතල හා කාර්යයන් සම්බන්ධයෙන් පනතක් කෙටුම්පත් කිරීම සඳහා අමාත්‍ය මණ්ඩලයේ අනුමැතිය ලබාගැනීමට සන්දේශ කෙටුම්පතක් හා ප්‍රතිපත්ති විග්‍රහ පත්‍රිකාවක් ඉදිරිපත් කර තිබුනද ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ විධිවිධාන ප්‍රකාරව එකී කාර්යය සඳහා ප්‍රතිපාදන සලසා නොමැති බව නිරීක්ෂණය කරමි.

03. එබැවින් ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව සඳහා සංශෝධනයක් ගෙන එනු ලබන අවස්ථාවකදී මෙම ඉල්ලීම ඉදිරිපත් කිරීම සුදුසු වේ.

04. කෙසේ වුවද, මෙම කරුණ පිළිබඳව ගරු නීතිපතිතුමාගේ නිරීක්ෂණ ස්වාධීනව ලබාගැනීම සුදුසුයැයි යෝජනා කරනු කැමැත්තෙමි.

ඔස්ටින් ප්‍රනාන්දු
ජනාධිපති ලේකම්

ගාලු මුවදොර, කොළඹ 01
காலி முகத்திடல், கொழும்பு 01
Galle Face, Colombo 01
දුරකථන / தொலைபேசி / Telephones: ++ 94 (0) 11 2354418, ++ 94 (0) 11 2473873
ෆැක්ස් / தொலைநகல் / Fax: ++ 94 11 2446657
ඊ-තැපෑල / மின்-அஞ்சல் / e-mail: prsec@presidentsoffice.lk